பல நல்ல சாதனைகளைச் சாதித்து வருகிறது. அதே சமயத்தில், 1993–94 ஆம் ஆண்டிற்கான, பொது நிறுவனங்களின் குழு, பல சாதனைகளை இந்த ஆண்டு சாதித்திருக்கிறது. தணிக்கைத் துறைத் தலைவரால் அளிக்கப்பெற்ற, வணிக தணிக்கை அறிக்கைகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு, அவற்றின்மீது குழுவின் அறிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளன. குழுவின் பரிந்துரைக்காக, தணிக்கை அறிக்கை (வணிகம்) எதுவுமே நிலுவையில் இல்லை என்கிற இந்த நிலை, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, பொது நிறுவனங்களின் குழுவின் வரலாற்றிலேயே இதுவரையிலும் இல்லாத ஒரு சாதனையாகும். கிடைத்துள்ள தகவலின்படி, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிலே, வேறு எந்த மாநிலத்திலும் இந்த மாதிரியான நிலை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

மேலும், குழு, தன்னாய்வுக்காக நான்கு துறைகளை எடுத்துக் கொண்டு, அந்த நான்கு துறைகளிலே, மூன்று துறைகளையும், சென்ற ஆண்டிலே இருந்த ஒரு துறையையும் எடுத்துக்கொண்டு அறிக்கைகளை அளித்து ஒரு சாதனை படைத்துள்ளது. மேலும், மொத்தமாக 79 அறிக்கைகளை இந்தக் குழு பேரவைக்கு அளித்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொண்டு, இந்தக் குழுவை நல்லபடி செயலாற்ற ஆக்கமும், ஊக்கமு அளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்தக் குழுவின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஆண்டு எல்லாக் குழுவினரும் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார்கள், அதற்காக, எல்லாக் குழுவினர்க்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்,

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 1993-94-ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின், 16 முதல் 19 வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS